செய்தி வெளியீடு:1012 21.11.08

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25–11–2008 அன்று சென்னையில் மணிமேகலை விருது மற்றும் 3000 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குகிறார்கள்

## மணிமேகலை விருதுகள்

சிறப்பாக செயலாற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகளை தமிழ் நாடு அரசு அறிவித்துள்ளது. மாநில அளவில் 5 சிறந்த ஊராட்சிஅளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.1 இலட்சமும், 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.50,000/–மும் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகளுக்காக ரூபாய் 35 இலட்சங்கள் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஒன்றுக்கு ரூபாய் 50,000/–மும், சிறந்த 3 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூபாய் 10,000/– மும் வழங்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்ட பயிற்சி, கடன் திரும்பச் செலுத்துதல், அரசு நலத் திட்டங்களைச் செம்மையாக செயல்படுத்திட இணைந்து பணியாற்றுதல், சமூக பொறுப்புணர்வோடு செயலாற்றுதல் ஆகிய அம்சங்களைக் கருத்தில் கொண்டு 2007–08 ம் ஆண்டிற்கான மாநில அளவிலான மணிமேகலை விருது பெற ஐந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும், பத்து சிறந்த சுய உதவிக் குழுக்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மாநில அளவிலான மணிமேகலை விருதுகள் 25.11.2008 அன்று மாலை 4.00 மணி அளவில் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெறும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது

மணிமேகலை விருது பெறும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

1. திருராமேஸ்வரம் கூட்டமைப்பு
   திருவாரூர் மாவட்டம்
2. ஊரப்பாக்கம் கூட்டமைப்பு
   காஞ்சிபுரம் மாவட்டம்
3. ஜெகத்தலா கூட்டமைப்பு
   நீலகிரி மாவட்டம்
4. என். பஞ்சம்பட்டி கூட்டமைப்பு
   திண்டுக்கல் மாவட்டம்
5. படந்தால் கூட்டமைப்பு
   விருதுநகர் மாவட்டம்

சுய உதவிக் குழுக்கள்

1. செம் புங்கனூர்–III சுய உதவிக் குழு
   வேலூர் மாவட்டம்

2. எழில் நாட்டார் மங்கலம் –VII சுய உதவிக் குழு
   கடலூர் மாவட்டம்

3. சமத்துவம் சுய உதவிக் குழு
   திண்டுக்கல் மாவட்டம்

4. சின்ன எலச்சிபாளையம் – I சுய உதவிக் குழு
   நாமக்கல் மாவட்டம்

5. ஈஸ்வரர் சுய உதவிக்குழு
   நீலகிரி மாவட்டம்

6. மகாத்மா காந்தி சுய உதவிக் குழு
   தருமபுரி மாவட்டம்

7. கற்பகத்தரு சுய உதவிக் குழு
   தூத்துக்குடி மாவட்டம்

8. அன்னை தெரசா சுய உதவிக் குழு
   ஈரோடு மாவட்டம்

9. சுடர் மகளிர் மேம்பாட்டு சங்கம்,
   சேலம் மாவட்டம்

10. அன்னை தெரசா சுய உதவிக் குழு
    தேனி மாவட்டம்

## சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

மகளிர் திட்டத்தின் கீழ் இதுவரை **60** இலட்சத்து **63** ஆயிரம் பேரை உறுப்பினர்களாகக் கொண்டு **3,78,564** சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் **2,64,165** குழுக்கள் ஊரகப் பகுதியிலும், **1,14,399** குழுக்கள் நகரப் பகுதியிலும் செயல்பட்டு வருகின்றன.

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், அவர்கள் வருமானம் ஈட்டக் கூடிய சிறிய தொழில்களைத் தொடங்கிட வசதியாக சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியத்துடன் கூடிய கடன் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுவாக ஊரகப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு மட்டுமே சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டு வந்ததால், நகர்ப்புற சுய உதவிக் குழுக்கள் வங்கிக் கடன் இணைப்பு பெறுவதில் சிரமங்கள் இருந்தன. எனவே **2006–07**ஆம் ஆண்டு முதல் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கும் திட்டத்தினை அரசு அறிவித்தது. இரண்டு ஆண்டுகளில் **30** ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. **30** கோடி சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டது.

மேலும் இதுவரை சுழல் நிதி பெறாமல் விடுபட்டு போன அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளிலுள்ள சுய உதவிக் குழுக்களுக்கும் நடப்பு நிதியாண்டிலேயே சுழல் நிதி வழங்கிட முடிவெடுக்கப்பட்டு, 1 இலட்சத்து 50 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியமாக ரூ. 150 கோடியை தமிழக அரசு அனுமதி அளித்தது.

மேலும் சுய உதவிக் குழுக்களுக்கு இதுவரை சுழல் நிதி மானியமாக ரூ. 10 ஆயிரம் வழங்குவதுடன், வங்கிக் கடன் இணைப்பாக அதிகபட்சம் ரூ. 15 ஆயிரம் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. சுழல் நிதி வங்கிக் கடன் வரம்பை அதிகப்படுத்தும் நோக்கில் 2008 ஏப்ரல் திங்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், அனைத்து வங்கியாளர் கூட்டத்தைக் கூட்டி மேற்கொண்ட முயற்சியின் பயனாக தற்போது சுழல் நிதி மானியத்துடன் குறைந்தபட்ச முதற்கட்ட வங்கிக் கடன் இணைப்பாக ரூ. 50 ஆயிரம் வழங்கப்படுகிறது. மேலும் இரண்டாவது மற்றும் மூன்றாம் கட்ட வங்கிக் கடன் இணைப்பாக முறையே ரூ. 1 இலட்சம் மற்றும் ரூ. 1 இலட்சத்து 50 ஆயிரம் வரை வழங்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்களின் மேம்பாட்டில் வங்கிக் கடன் இணைப்பு மிக முக்கிய பங்காற்றுகிறது. மகளிர் திட்டம் தொடங்கிய காலம் முதல் மார்ச்சு 2008 முடிய ரூபாய் 3163.39 கோடி வங்கிக் கடன் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாண்டு எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சியின் காரணமாக, இந்த ஆண்டில் மட்டும் இதுவரை ரூ. 1108.32 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியாண்டின் முடிவில் தமிழகத்தில் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு இந்த ஒரே வருடத்தில் ரூ. 2000 கோடியை எட்டும்.

2008 – 09ம் ஆண்டில் 1 இலட்சத்து 50 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியத்துடன் கூடிய கடன் வழங்க முடிவெடுக்கப்பட்டு, இதுவரை 64,057 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் ரூ. 354.11 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் நடப்பாண்டில் 8 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கத் திட்டமிட்டு அதில் முதற்கட்டமாக 19.08.2008ல் நடைபெற்ற விழாவில் 2500 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 27.36 கோடி சுழல் நிதி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக 25.11.2008 அன்று 3000 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 35.09 கோடி சுழல் நிதி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்படுகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.